வேலூர் மாவட்டமுதன்மைக் கல்விஅலுவலரின்செயல்முறைகள்
ந.கஎண் 2574/ ஆ1 / 2021 நாள் 22.08.2021

– – –

பொருள் : பள்ளிக்கல்வி– மெட்ரிக்/ மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர்கள்/தாளாளர்கள், ஆயத்த கூட்டம் நடைபெறுதல் – கூட்டத்திற்கு கலந்து கொள்ளும் போது கீழ்க்கண்ட தகவல்கள் / விவரங்கள் ஒப்படைக்க கோருதல் – தொடர்பாக.

பார்வை இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 21.08.2021.

– – –

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு /நகரவை / ஆதிதிராவிடர் நல /அரசு நிதியுதவி/ மெட்ரிக்/.உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் வட்டாரக்கல்வி அலுவலர்கள், கலந்து கொள்ளும் போது தவறாமல் கீழ்க்கண்ட விவரங்களை ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளின் கடைசியாக பெற்ற அங்கீகாரம் / தொடர் அங்கீகார ஆணை நகல்.

2. மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளில் **2021– 2022 ஆம் ஆண்டிற்கான RTE திட்டத்தின்** கீழ் சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களின் விவரம் இணைப்பில் உள்ள படிவத்தின் படி தாளாளர் / முதல்வர்கள் கையொப்பத்துடன்.

**( LOT / UN LOT ) Confirm Selection / Waitng List**

**3.** அனைத்து வட்டாரக் கல்வி அலுவலங்களில் தங்கள் ஒன்றியத்திற்குரிய **RTE 2020–2021 ஆம் கல்வியாண்டிற்கான கேட்பு தொகை குழு சரிபார்ப்பு படிவங்கள் 4 நகல்கள் மற்றும் அப்பள்ளிக்குரிய கல்வி கட்டண நிர்ணயக்குழு நகல்** தொகுத்து ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

3. அனைத்து ஒன்றியங்களில் உள்ள நர்சரி & பிரைமரி பள்ளிகளின் கடைசியாக பெற்ற அங்கீகாரம் / தொடர் அங்கீகாரம் ஆணை நகல் **( வட்டாரக் கல்வி அலுவலர்கள் மூலமாக)**

**4. அனைத்து ஒன்றியங்களில் உள்ள நர்சரி** & பிரைமரி பள்ளிகளில் **2021– 2022 ஆம் ஆண்டிற்கான RTE திட்டத்தின்** கீழ் சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களின் விவரங்களை **மாவட்டத்திற்குரிய RTE LOGIN –ல்** தங்கள் ஒன்றியத்திற்குட்பட்ட பள்ளியில் **RTE சேர்க்கை செய்யப்பட்ட விவரத்தினை** ( ALLOTED / WAITING LIST ) பணியினை 23.08.2021 ற்குள் வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர் / மேற்பார்வையாளர்கள் கொண்டு நிறைவு செய்து அதன் அறிக்கையினை இவ்வலுவலகத்திற்கு ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**5.** அரசு உயர்நிலை / மேல்நிலைகளின் ஆதிதிராவிட நலத்துறையின் கீழ் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற்ற மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர் விவரம் மற்றும் எண்ணிக்கை விவரம் இத்துடன் இணைத்துள்ள படிவம்–1 உள்ளவாறு ஒப்படைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**6.** அரசு நிதியுதவி பெறும் தொடக்க / நடுநிலைப் / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களில் ஏற்படும் காலிப்பணியிடங்களுக்கு இனசுழற்சி முறையில் பணிநியமனம் செய்த விவரம் கீழ்க்கண்ட படிவத்தில் உள்ளவாறு ஒப்படைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(கலம் 5 மற்றும் 6 கோரியுள்ள விவரம் இல்லை எனில் இன்மை அறிக்கை அளிக்கப்பட வேண்டும்.)**

**கூட்டம் நடைபெறும் கால அட்டவணை விவரம்**

| வ.எண். | கூட்டம் நடைபெறும் நாள் | கூட்டம் நடைபெறும் இடம் | கூட்டம் நடைபெறும் நேரம் |
|---|---|---|---|
| 1. | 24.08.2021 செவ்வாய் கிழமை | ஹோலிகிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சத்துவாச்சாரி, வேலூர். | காலை 10.00 மணிமுதல் 11.30 மணிவரைஅனைத்து வகை மேல்நிலைப் பள்ளிகள் |
| 2. | 24.08.2021 செவ்வாய் கிழமை | ஹோலிகிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சத்துவாச்சாரி, வேலூர். | காலை 11.30 மணிமுதல் 1.00 மணிவரைஅனைத்து வகை உயர்நிலைப்பள்ளிகள் |
| 3. | 24.08.2021 செவ்வாய் கிழமை | ஹோலிகிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சத்துவாச்சாரி, வேலூர். | பிற்பகல் 2.00 மணிமுதல் 3.00 மணிவரை வேலூர் மாவட்ட, அனைத்து வட்டாரக்கல்விஅலுவலர்கள். |
| 4. | 24.08.2021 செவ்வாய் கிழமை | ஹோலிகிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சத்துவாச்சாரி, வேலூர். | பிற்பகல் 3.00 மணிமுதல் 4.00 மணிவரை வேலூர் மாவட்ட, அனைத்துஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவி திட்டஅலுவலர்கள் (APO) |

இணைப்பு

1.RTE 2021-2022 படிவம்
2. மாற்றுத்திறனாளி மாணவ/ மாணவியர் விவரம் படிவம்–1
3. மாற்றுத்திறனாளி காலிபணியிடத்திற்குரிய இடஒதுக்கீடு பணிநியமன விவரம் படிவம்–2

முதன்மைக்கல்விஅலுவலர் (பொ),
வேலூர்.

**பெறுநர்**

1) தலைமையாசிரியர்கள்/பள்ளிமுதல்வர்கள், அரசு/நகரவை / ஆதிதிராவிடர் நல /அரசுநிதியுதவி/ மெட்ரிக்/ சி.பி.எஸ்.இ. உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள்.

2) வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்தபள்ளிக்கல்வி, உதவிதிட்டஅலுவலர்கள் (RMSA, SSA)

3) வேலூர் மாவட்ட, வட்டாரக்கல்விஅலுவலர்கள்

4) வேலூர் மாவட்ட, ஆசிரியர் பயிற்றுநர்கள்மற்றும் மேற்பார்வையாளர்கள்